சமத்துவத்துடன் வாழும் கலிக்கம்பட்டி கிராமத்திற்கு

# நலத்திட்ட உதவிகளை செய்யும்போது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது!

## அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஜூன் 25-

மும்மத மக்கள் ஒற்றுமையுடன் வாழும் கலிக்கம்பட்டி கிராமத்திற்கு நலத்திட்ட உதவிகளை செய்யும்போது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி அவர்கள் பேசியதோடு காவிரி தண்ணீர் மட்டுமின்றி வைகை ஆற்று தண்ணியும் கலிக்கம்பட்டி கிராமத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் க லிக்கம்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் முகாமிற்கு கோட்டாட்சியர் சக்திவேல் தலைமை தாங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திலகவதி, சங்கங்களின் இணைப் பதிவாளர் குருமூர்த்தி தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தி.மு.க. மாநிலத் துணைப் பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி கலந்து கொண்டு அங்குள்ள நியாய விலை கடை திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை விநியோகம் செய்தார் பின்னர் பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார்

அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசும் போது, கலிக்கம்பட்டி கிராமத்திற்கு வரும் போதெல்லாம் மனதிற்கு மகிழ்ச்சி கிடைக்கும் காரணம் மும்மத மக்கள் ஒற்றுமையுடன் வாழும் கிராமங்களி கலிக்கம்பட்டி கிராமம் ஒன்று குறிப்பாக பொதுமக்களுக்கு பயனளிக்கக்கூடிய திட்டங்கள் எதுவாக இருந்தாலும் ஒற்றுமையுடன் வந்து கேட்பார்கள்என்றார் கடந்த திமுக ஆட்சியின் போது 15 வருடங்களுக்கு முன்பு நிலக்கோட்டை பேரணையிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரப்பட்டு அருகில் உள்ள கலிக்கம்பட்டி கிராமத்திற்கு கொண்டுவர திட்ட மிடப்பட்டு குழாய்கள் பதிக்கப் பட்டது அதன் பின்னர் ஆட்சி மாற்றத்தினால் எதுவும் நடைபெறவில்லை இப்போது அதை நடைமுறைப்படுத்த திட்டமிட்டு உள்ளேன் குறிப்பாக கலிக்கம்பட்டி கிராமத்திற்கு வைகை ஆற்று தண்ணீர் மட்டுமின்றி வைகை ஆற்று தண்ணியும் கிடைக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது 2 லட்சம் பேருக்கு முதியோர் உதவி தொகை வழங்கப்பட்டது.

குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் மட்டும் 15 ஆயிரம் பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப் பட்டது அதன் பின்னர் அதிமுக ஆட்சியில் அதை: நிறுத்தி விட்டனர் இப்போது இன்று நின்று போன முதியோர் உதவித்தொகை அனைவருக்கும் கிடைக்க பொதுமக்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்று வருகிறேன்: குறிப்பாக இப்பகுதி சேர்ந்த சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் தங்கள் பள்ளிக்கு வரும் தார் சாலையை சீரமைக்க மனு கொடுத்துள்ளார்கள் பத்து நாட்களில் தார்சாலை அமைப்பதுக்கான பணி விரைவில் தொடங்கப்படும். தரமான தார்சாலைகள் அமைத்து கொடுக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் வட்டாட்சியர் முத்துமுருகன், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் தனுஷ்கோடி, மாவட்ட வழங்கல் அலுவலர் அன்பழகன்ஆத்தூர் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், தட்சினாமூர்த்தி, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலக மண்டல துணை வட்டாட்சியர் பிரவீனா, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன். பஞ்சம்பட்டி மணி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப் பாளர்கள் வாஞ்சி நாதன், கணேசன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. அவைத் தலைவர் சிவக்குமார், துணைச் செயலாளர்கள் ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், பொருளாளர் கருப்பையா, கலிக்கம்பட்டி ஊராட்சி முன்னாள் தலைவர்கள் புவனேஸ்வரி அருளரசன் கோமதி செல்வகுமார்முன்னால் மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி ராஜகணேஷ், ஆத்தூர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜ கணேஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன்,

ஆத்தூர் மேற்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கை சாமி, பேரூராட்சி மன்ற தலைவர்கள் நந்த கோபால், ரேகா அய்யப்பன், அரசு ஒப்பந்தகாரர்கள் விக்னேஷ்வரன், ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் மாவீரன் நெல்லை சுபாஷ், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்,

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் சார்பில்,

# 2100 பேருக்கு அடையாள அட்டைகள் - 2184 பயனாளிகளுக்கு நல உதவிகள்!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் - சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்!

சென்னை, ஜூன் 25 -

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் நேற்று முன்தினம் (23.06.2025) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆணையர் மற்றும் சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர் செயலர் வா. சம்பத், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி மரு.ராணி ஸ்ரீகுமார், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் , சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் மற்றும் சீர்மரபினர் நல வாரியத் துணைத்தலைவர் இராசா அருண்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 2100 பயனாளிகளுக்கு நல வாரிய உறுப்பினர் அட்டைகளையும், 84 பயனாளிகளுக்கு ரூ.21.42 இலட்சம் என மொத்தம் 2184 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

**இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்ததாவது:**

தமிழ்நாடு முதலமைச்சர் ஒவ்வொரு நாளும் ஏழைகளுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அடித்தட்டு மக்களை மேலே துக்கி விடுவதற்காகவே தமிழ்நாடு அரசு மிகவும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பாக இன்று பயனாளிகளுக்கு சீர்மர பினர் நல அடையாள அட்டைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து துறைகளுக்கும் ஒரு வேலை இருக்கிறது. அதிலும் இந்த துறை மிகவும் முக்கியமான துறையாக இருக்கிறது. ஒரு துறை வெளியில் தெரிய வேண்டுமென்றால், அந்த துறையில் தமிழ்நாடு முதலமைச்சர் எடுக்கின்ற முயற்சியால் தான் தெரியும்.

அந்த வகையில் எண்ணற்ற திட்ட பயன்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் சார்பில் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் சார்பில், பயனாளிகளுக்கு சீர்மரபினர் நல அடையாள அட்டைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுகிறது.

அதனடிப்படையில் இன்று, சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின் கீழ் 2100 பயனாளிகளுக்கு சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டைகளையும், 48 பயனாளிகளுக்கு ரூ.3,21,600/ மதிப்பிலான விலையில்லா தேய்ப்புப் பெட்டிகளையும், 5 பயனாளிகளுக்கு ரூ.28,000/ மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், 1 பயனாளிக்கு ரூ.1,500/ மதிப்பிலான கல்வி உதவித்தொகையும், 23 பயனாளிகளுக்கு ரூ.3,31,200/ மதிப்பிலான முதியோர் ஓய்வூதியத்தொகையும், 1 பயனாளிக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக ரூ.35,000/ மதப்பில் ஈமச்சடங்கு உதவிதொகையும், மற்றும் 6 பயனாளிகளுக்கு ரூ.14,24763/ மதிப்பிலான டாப்செட்கோ தனிநபர் கடன் உதவித் தொகையும் என மொத்தம் 2184 பயனாளிகளுக்கு ரூ.21.42 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையை பொதுமக்கள் அனைவருக்கும் தெரியக்கூடிய வகையிலும், இது தெரிவதன் மூலமாக அனைவரும் இதில் உறுப்பினராவதற்கும் ஒரு வாய்ப்பினை நமக்கு முதலமைச்சர் ஏற்படுத்தி உள்ளார்கள் என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

**இந்நிகழ்ச்சியில், அமைச்சர் சிவ,வீ. மெய்யநாதன் தெரிவித்ததாவது:**

தமிழ்நாடு முதலமைச்சர் விளிம்பு நிலையில் இருக்கின்ற அடித்தட்டு மக்கள் பயன்பெற வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். சீர்மரபினர் என்று அழைக்கப்படுகின்ற 68 சமூகங்களை சார்ந்த மக்கள் பயன்பெற வேண்டும் என்பதன் அடிப்படையில் முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களால் சீர்மரபினர் நல வாரியம் 2007 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது.

தற்போது, தமிழ்நாடு முதலமைச்சர் இந்த நல வாரியத்தை மறு கட்டமைப்பு ஏற்படுத்தி, ஒரு இலட்சம் சீர்மரபினர் உறுப்பினர் சேர்ப்பதற்கு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில், நான்கு மாத காலத்திற்குள் சுமார் 91,000 உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெற்றுள்ளது.

அடித்தட்டு மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த நல வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு வகையான பயன்கள் வழங்கப்பட்டு வருகிறது. அதில், மகப்பேறு உதவித்தொகை, மூக்கு கண்ணாடி உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, 60 வயது நிரம்பிய முதி யோர்களுக்கான உதவித்தொகை, திருமண உதவித்தொகை, விபத்து மரண உதவித் தொகை, இயற்கை மரண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு வகையான பயன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலமாக தமிழ்நாட்டில் வீடுகள் கட்டிவிட்டு 50 ஆண்டுகளாக பட்டாக்களுக்காக சிரமப்பட்ட ஏழை, எளிய 16 இலட்சம் மக்களுக்கு இலவச பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு பள்ளியில் படித்த ஏழை எளிய மாணவர்களுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் படி, மாணாக்கர்களுக்கு கல்விக்கட்டணம் உட்பட அனைத்து செலவுகளையும்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்றவுடன் மருத்துவ படிப்புகள் அல்லாது, பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் ஆகிய துறைகளை சார்ந்த உயர்கல்வியிலும் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டினை ஏற்படுத்தி, அவர்களுக்கான கல்வி கட்டணங்கள் உட்பட அனைத்தையும் தமிழக அரசே ஏற்கும் என்ற அறிவிப்பினையும் அறிவித்தன் அடிப்படையில், ரூ.911 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 40,611 மாணாக்கர்கள் பயன் பெற்று வாழ்வில் உயர்ந்த நிலை அடைவதற்கு வழி வகை ஏற்படுத்தியுள்ளார்கள்.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் விளிம்பு நிலை மக்களை உயர்த்துகின்ற ஒப்பற்ற திட்டங்களாக எல்லா இடங்களிலும் பார்க்கப்படுகிறது. அப்படிப்பட்ட முதலமைச்சர் எங்களுக்கு காட்டக்கூடிய திசையில் சீர்மரபினர் நல வாரியத்திற்கான பயன்கள் அத்தனையையும் கொண்டு சேர்ப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்வோம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எஸ்.கே.கனகராஜ், சீர்மரபினர் நலவாரிய நிர்வாக அலுவலர் குணசேகர், இராஜபாளையம் நகர்மன்றத் தலைவர் திருமதி பவித்ரா ஷ்யாம், திருவில்லிபுத்தூர் நகர மன்றத் தலைவர் ரவிக்கண்ணன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி அண்ணா விளையாட்டு அரங்கம் முதல் மணிமேடை சந்திப்பு வரையிலான சாலையின் ஓரத்தில் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்கள் அமைத்து நடைபாதை அமைக்கும் பணியினை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, ரகுராமன், கு.அகஸ்டினா கோகிலவாணி, ராஜா, நெ.கலாராணி, ஜெ.நா.அனந்த லெட்சுமி, எம்.எ.பியாசா ஹாஜிபாபு, ப.பன்னீர் செல்வம், பி.வேல்முருகன், எம்.ராஜன் உட்பட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் தெற்கு நகர் கழக இளைஞரணி சார்பாக நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டும் மற்றும் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் செ. முருகேசன் எம்.எல்.ஏ., டாக்டர் எஸ் சுந்தர்ராஜன் மற்றும் சம்பத் ராஜா, சன் சம்பத்குமார், சேது கருணாநிதி, ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட இளம் பேச்சாளர் மோகநிதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# மக்கள் கொண்டாடும் முதல்வர் இங்கே!

வரலாற்றுச் சிறப்புமிக்க வள்ளுவர் கோட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையை ஏற்றம்பெற வைத்த, தமிழ்நாடு முதலமைச்சருக்குப் பாராட்டும் நன்றி அறிவிப்பும் தெரிவித்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் **“சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்”** என்ற பாடல் மெட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை விளக்கும் பாடல் பாடப்பட்டது. அப்பாடல் அரங்கில் பிரம்மாண்ட வரவேற்பு பெற்றது.

இசை : இசையரசர் பரத்வாஜ்
பாடியவர்: பரத்வாஜ், மாலதி, செந்தில்தாஸ்
பாடல் : சொற்கோ இரா.கருணாநிதி
மெட்டு :சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்



மக்கள் கொண்டாடும் முதல்வர் இங்கே…!
சற்றும் ஓயாத முதல்வர் இங்கே…!
கண்ணுக்குள் காக்கின்ற முதல்வர் இங்கே…!
கலைஞரின் இரண்டாம் வடிவம் இங்கே…!

உரிமைக் குரலாய் முதல்வர் இங்கே…!
வெற்றி விரலாய் முதல்வர் இங்கே…!
கோடி மக்கள் நாடித்துடிப்பாய்…
ஓடி உழைக்கும் முதல்வர் இங்கே…!

புதுமைப் பெண்ணின் திட்டம் தந்து;
தமிழ்ப்புதல்வன் திட்டம் தந்து;
உரிமைத் தொகையை அள்ளித்தந்த;
உதய சூரியன் இங்கே…! இங்கே…!

கைம்பெண், முதியவர் உதவித்தொகையைக்
கருணையோடு தந்தவர் இங்கே…!
உங்கள் தொகுதியில் முதல்வர் என்று;
எங்கும் நன்மை தந்தவர் இங்கே…!

நீதி தவறா முதல்வர் இங்கே…!
நிம்மதி படைக்கும் முதல்வர் இங்கே…!
நாட்டைக் காக்கும் முதல்வர் இங்கே…!
ரோட்டில் நடக்கும் முதல்வர் இங்கே…!

காலை உணவுத் திட்டம் தந்து;
இல்லம்தேடிக் கல்வி தந்து;
வெற்றிக் கனியை எட்டிப் பறிக்கும்
ஒற்றை முதல்வர் இங்கே…! இங்கே…!

பூமிக்கெல்லாம் புதிதாய்த் திட்டம்
வாரி வழங்கும் முதல்வர் இங்கே…!
மனிதர் வாழத் திட்டம் தீட்டி;
மானுடம் காக்கும் முதல்வர் இங்கே…!

மண்ணுயிர் எல்லாம் தன்னுயிராக…
இன்னுயிர்க் காக்கும் முதல்வர் இங்கே…!

மேலோர் என்று யாருமில்லை…
கீழோர் என்று யாருமில்லை…
எல்லா மனிதனும் ஒன்றே என்ற;
இந்தியாவின் முதல்வர் இங்கே…!

இதயம் காக்கும் திட்டம் தந்து;
பாதம் காக்கும் திட்டம் தந்து;
கீழடி ஆய்வில் வெற்றிகள் தந்து;
நூலகம் அமைத்த முதல்வர் இங்கே…!

ஊசி மணி, பாசி விற்பவர்
இல்லம் காத்த முதல்வர் இங்கே…!
பேசும் பேச்சில் செயலில் வெல்லும்;
பீரங்கி போல முதல்வர் இங்கே…!

பெரியார், அண்ணா, கலைஞர் கனவை
சரியாய்ப் படைக்கும் முதல்வர் இங்கே…!
நெற்றிக் கண்ணின் வெற்றிப்படைக்கும்
ஒற்றைச் சூரியன் முதல்வர் இங்கே…!

மக்களைத்தேடி மருத்துவம் தந்த
கருணை பொழிந்த முதல்வர் இங்கே…!
வைக்கம் வீரர் வழியில் வந்த
வலிமை மிகுந்த முதல்வர் இங்கே…!

வருகிற காலம் நமக்கே என்று;
வசந்த காலம் நமக்கே என்று;
அறுபது ஆணைகள் நமக்கே படைத்த
அன்னை மனது முதல்வர் இங்கே…!

கடைக்கோடி திறனாளிக்கும்
உயிர்நாடி இங்கே…! இங்கே…!
சமூகநீதி படைத்த தலைவர்
சாதனை முதல்வர் இங்கே…! இங்கே…!

கல்வி தந்து, கருவிகள் தந்து;
சலுகைகள் எல்லாம் வாங்கித் தந்து;
வேலைவாய்ப்பு முகாம் தந்து;
விடியல் படைத்த முதல்வர் இங்கே…!

குறைகளை நீக்க வாரியம் அமைத்து;
குறைதீர்ப்பு மையம் அமைத்து;
நிதியுதவி அள்ளிக்கொடுத்து;
நித்தம் காக்கும் முதல்வர் இங்கே…!
மகளிர் விடியல் பயணம் படைத்து;
மாநிலம் போற்றும் முதல்வர் இங்கே…!
சேவை மையங்கள் அமைத்துக் கொடுத்துச்
சிக்கல் நீக்கும் முதல்வர் இங்கே…!

கோயில் எங்கும் தமிழே கேட்கும்
கோட்டை ஆளும் முதல்வர் இங்கே…!
அனைத்துச் சாதி மனிதரெல்லாம்
அர்ச்சகராக்கிய முதல்வர் இங்கே…!

ஒடுக்கப்பட்டோர் உரிமைகள் கேட்கும்
ஓய்வில்லாத முதல்வர் இங்கே…!
மக்கள் மத்தியில் நடந்து செல்லும்
மாநில உதயம் முதல்வர் இங்கே…!

மாற்றுத்திறனாளிகள் வாழ்வில்
ஏற்றம் பற்பல தந்தவர் இங்கே…!
ஆட்சிப் பொறுப்பில் அமர வைக்கும்
திராவிட மாடல் முதல்வர் இங்கே…!

மாற்றுத்திறனாளிகள் நம்மைத்
தி.மு.க.வின் அணிகளில் ஒன்றாய்
ஏற்றி வைத்த முதல்வர் இங்கே…!
எங்களைக் காக்கும் முதல்வர் இங்கே…!

அடையாள அட்டை நமக்குத் தந்து
ஆட்சி செய்யும் இதயம் இங்கே…!
உள்ளாட்சி அமைப்பிலே பிரதிநிதியாய்
நம்மைப் படைத்த உதயம் இங்கே…!

மாற்றுத்திறனாளிகள் வாழ்வை
மாற்றிப் படைத்த முதல்வர் இங்கே…!
நதியைப்போல மக்களைக் காக்கும்
உதயநிதியைத் தந்தவர் இங்கே…!



பேராசிரியர்
**சொற்கோ இரா.கருணாநிதி**